

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.8.2024) கோவளத்தில் உள்ள ரேலா மருத்துவமனையின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் முகமது ரேலா அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று, அண்மையில் திருமணம் நடைபெற்ற அவரது மகள் மரியம் ரேலா – பென் அலெக்சாண்டர் ஸ்நெல் ஆகிய புதுமணத் தம்பதியினருக்கு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி வாழ்த்து தெரிவித்தார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன், தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் ஜி. காமராஜ் ஆகியோர் உள்ளனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.08.2024) ராமேஸ்வரம் முதல் சென்னை வரை 604 கி.மீ தூரம் நீச்சலடித்து சாதனை படைத்த தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் ஆட்டிசம் மாணவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து நினைவு பரிசு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணைத் தலைவர் டாக்டர். அசோக் சிகாமணி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கலைஞரும் தமிழும் போல, வாழ்க!

## கே.பி. சங்கர் எம்.எல்.ஏ. இல்லத் திருமண விழாவில்

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை,ஆக.21-**

**சென்னை, திருவொற்றியூரில், கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில்,மாநில மீனவர் அணித் துணைத்தலைவர் கே.பி. சங்கர் மகன் பி.எஸ்.திலீபனுக்கும் வி.விசாலிக்கும், நேற்று முன்தினம் திருமணம் நடைபெற்றது. இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திப் பேசினார்.**

**இதில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:**

கே.பி.சங்கர் அவர்களின் இல்லத் திருமண விழா ஒரு திருமண விழாவாக மட்டும் இல்லாமல் கிட்டத்தட்ட கழகத்தின் நிகழ்ச்சியைப் போல மிகச் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. இந்தப் பகுதியில் நம் கழகத்திற்காக என்றென்றும் உழைத்துக் கொண்டிருப்பவர். அவர் மட்டும் இல்லை, அவரின் தந்தை பரசுராம் அவர்களும் கழகத்திற்காகத் தன் உழைப்பைக் கொடுத்தவர்.

அவரின் அண்ணன் சாமி அவர்களும் இறுதி மூச்சு வரை கழகத்திற்காகப் பாடுபட்டவர். அவரின் வழியில் அண்ணன் சங்கர் அவர்களும் தொடர்ந்து கழகப் பணியில் ஈடுபட்டு சிறந்த சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். இங்கு முதலமைச்சர் வந்திருக்கிறார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்கள் வந்திருக்கிறார்கள், அமைச்சர்கள் வந்திருக்கிறார்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், கழகத்தினரெல்லாம் இவ்வளவு பெருந்திரளாக தங்களது குடும்ப நிகழ்ச்சி போல உரிமையோடு வந்திருக்கிறீர்கள் என்றால், அந்தளவிற்கு அண்ணன் சங்கர் அவர்கள் பாசமுள்ளவர். மனதில் ஒன்றையும் பேச்சில் ஒன்றையும் வைத்துக்கொண்டு பேசமாட்டார். மிகவும் வெளிப்படையானவர். அடிக்கடி கோபப்படுபவர். அவர் கோபப்படுவார் என்ற பயத்திலேயே இங்கு திருமணத்திற்கு வந்திருக்கீர்கள் என்றால், அண்ணன் சங்கர் அவர்கள் கழகப் பணியைச் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறார் என்று அர்த்தம்.

இங்கு வந்திருக்கிற அத்தனைப் பேருக்கும் முதலில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் நம் முதலமைச்சர் தலைமையிலான கழகக் கூட்டணிக்கு, தமிழ்நாட்டு மக்கள் 40க்கு 40 வெற்றியைக் கொடுத்து மிகப்பெரிய ஒரு அங்கீகாரத்தை நம் முதலமைச்சர் அவர்களுக்கும், கழக அரசிற்கும் கொடுத்திருக்கிறார்கள்.

குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்றால், இந்த வடசென்னைப் பகுதியில் வடசென்னை



மக்களாகிய நீங்கள், மீனவ சமுதாய மக்களான நீங்கள் நம் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி அவர்களுக்குக் கிட்டத்தட்ட 3 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிப் பெற வைத்துள்ளீர்கள். அதற்கு இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### நம்பிக்கையும் எதிர் பார்ப்பும்!

தொடர்ந்து 10 தேர்தல்களில் நம் தலைவர் அவர்களுக்கு நம் தமிழக மக்கள் வெற்றியைக் கொடுத்திருக்கிறார்கள் என்றால், நம் தலைவர் அவர்களின் மீதும், அரசின் மீதும் வைத்திருக்கக்கூடிய அந்த நம்பிக்கையும் எதிர்ப்பார்ப்பும்தான் காரணம்.

தாய்மார்கள் நிறைய பேர் வந்திருக்கிறீர்கள். எனவே, இரண்டு மூன்று விஷயங்களை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். தலைவர் அவர்களின் ஆட்சியில், அதிகமாகப் பயன்பெற்றது யார் என்று பார்த்தால், தாய்மார்கள்தான்.

அதுவும் சென்ற தேர்தலில் தாய்மார்களின் வாக்கு, எதிர்பார்ப்பு, நம்பிக்கை நம் கழகத்தின் மீதும், முதலமைச்சர் மீதும் மிகப் பெரிய அளவில் திரும்பியிருக்கிறது. அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு, தலைவர் அவர்கள் தொடர்ந்து நிறைவேற்றி வருகிற திட்டங்கள்.

### 500 கோடி பயணங்கள்

முதல் திட்டம், நம் தலைவர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்று முதல் கையெழுத்துப் போட்ட மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து வசதித் திட்டம். இந்த மூன்று வருடத்தில் மட்டும் மகளிர் மொத்தம் 500 கோடி பயணங்களை இந்தத் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முழுவதும் மேற்கொண்டுள்ளார்கள்.

ஒவ்வொரு தாய்மாரும் சுமார் 1,000 ரூபாய் மாதா மாதம் சேமிக்கிறார்கள். அதே போல் இன்னொரு திட்டம். புதுமைப்பெண் திட்டம். பெண்கள் வீட்டை விட்டு வெளியே வரவேண்டும். படிக்க வேண்டும். உயர் கல்வி படிக்க வேண்டும் என்று, அரசுப் பள்ளியில் படித்து எந்தக் கல்லூரிக்குச் சென்று படித்தாலும் அவர்களுக்குக் கல்வி ஊக்கத் தொகையாக புதுமைப்பெண் என்ற திட்டத்தை மாதா மாதம் கல்வி ஊக்கத்தொகையாக நம் திராவிட மாடல் அரசு, நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

### ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டம்!

ஆகஸ்ட் மாதத்திலிருந்து ஆண்கள், மாணவர்களும் அதிகம் படிக்க வேணடும் என்று தமிழ்ப் புதல்வன் என்ற திட்டத்தையும் தொடங்கி வைத்துள்ளார்கள். இதன் மூலம் வருடா, வருடம் 6 லட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெறுகிறார்கள்.

குழந்தைகள் படிக்க பள்ளிக்கூடத்திற்கு வர வேண்டும் என்று காலை உணவுத் திட்டம். ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய அனைத்து மாணவர்களும் பசியோடு இருக்கக்கூடாது, அவர்கள் வயிறார சாப்பிட வேண்டும் என்று முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். திங்கள் முதல் வெள்ளி வரை ஒவ்வொரு நாளும் 22 லட்சம் குழந்தைகள் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்கள்.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 16 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தை அறிவித்துச் செயல்படுத்தியவர்தான் நம் தலைவர் அவர்கள்.

எனவே, நம் கழகத் தலைவர் தலைமையில் இந்தத் திருமணம் நடந்திருக்கிறது. மணமக்களுக்கு மீண்டும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டு, மணமக்கள் நீங்கள் இருவரும் சிறப்பாக ஒவ்வொருவரின் சுயமரியாதை யை விட்டுக்கொடுக்காமல், உங்களின் உரிமைக்கு எப்போதும் குரல்கொடுத்து கலைஞரும் தமிழும் போல, நம் தலைவரும் தமிழ்நாடும் போல வாழ வேண்டும் என்று கூறிக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

## இந்துசமய அறநிலையத்துறை சார்பில்

# 172 பேருக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஆக. 21-**

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் இந்து சமய அறநிலையத்துறையில் உதவியாளர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 172 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

இது குறித்து வெளியான செய்திக் குறிப்பு வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.08.2024) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறையின் அமைச்சுப்பணியில் உதவியாளர் பணியிடத்திற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட 172 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களை முறையாக பராமரித்தல், சொத்துகளை பாதுகாத்தல் மற்றும் நிர்வகிக்கும் பணிகளை மேற்கொண்டு வரும் செயல் அலுவலர் பணியிடங்களும், துறையின் அமைச்சுப்பணியில் அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்களும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நிரப்பப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் செயல் அலுவலர் (நிலை1, நிலை3 மற்றும் நிலை4) பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 169 நபர்களுக்கும், இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 80 நபர்களுக்கும், தட்டச்சர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 101 நபர்களுக்கும் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் (நிலை 3) பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 31 நபர்களுக்கும், என மொத்தம் 381 நபர்களுக்கு ஏற்கனவே பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், கருணை அடிப்படையில் துறையில் இளநிலை உதவியாளர், அலுவலக உதவியாளர் மற்றும் இரவுக் காவலர் ஆகிய பணியிடங்களுக்கு 29 நபர்களுக்கும், திருக்கோயில்கள் சார்பில் 111 நபர்களுக்கும் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், இந்து சமய அறநிலையத்துறையில் பதவி உயர்வு வழங்கப்படாமல் நீண்டகாலமாக நிலுவையில் இருந்த 713 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டதோடு, திருக்கோயில்களில் தொடர்ந்து 5 ஆண்டுகள் தற்காலிகமாக பணிபுரிந்த 1,289 பணியாளர்கள் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து, இந்து சமய அறநிலையத்துறையின் அமைச்சுப்பணியில் உதவியாளர் பணியிடத்திற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட 172 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். முதலமைச்சர் அவர்களால் நேற்று 172 உதவியாளர் பணியிடத்திற்கு வழங்கப்பட்ட பணிநியமன ஆணைகளையும் சேர்த்து கடந்த மூன்று ஆண்டுகளில் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் மொத்தம் 693 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுலா. பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், 1 இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பட்டியல், பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட

# மக்களுக்கான இட ஒதுக்கீட்டைப் புறக்கணிக்கும் யு.பி.எஸ்.சி.!

## கழக மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. குற்றச்சாட்டு!

*சென்னை, ஆக. 21 -*

பட்டியல், பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இடஒதுக்கீட்டை யு.பி.எஸ்.சி. புறக்கணிக்கிறது என்று தி.மு.க. எம்.பி. வில்சன் குற்றம்சாட்டியுள்ளார். இது குறித்து மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது:-

“ஆட்சேர்ப்பு செயல்முறையில் எஸ்.சி., எஸ்.டி., ஓ.பி.சி., பிரிவினருக்கான இட ஒதுக்கீட்டை பின்பற்ற வேண்டும் என்ற அரசியல் சாசன உத்தரவை யு.பி.எஸ்.சி., எப்படி புறக்கணித்துள்ளது என்பதற்கு யு.பி.எஸ்.சி., இன்று வெளி



யிட்டுள்ள பின்வரும் விளம்பரம் ஒரு சிறந்த உதாரணமாகும்..

பதவிகளுக்கான எந்த இட ஒதுக்கீடும் வழங்காமல், 10 இணை செயலாளர் பதவிகள், 35 இயக்குனர் / துணை செயலாளர் பதவிகள் என மொத்தம் 45 பணியிடங்களுக்கான அறிவிப்புகளை யு.பி.எஸ்.சி. வெளியிட்டுள்ளது.

இதில் வேடிக்கை என்னவென்றால், ஒன்றிய அரசு ஊழியர்கள் இந்த பதவிகளுக்கு விண்ணப்பிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

சாதாரணமாக இது போன்ற விளம்பரங்கள் வெளியிடும்போது, மொத்தமுள்ள 45 இணைச் செயலாளர் மற்றும் இயக்குநர், துணை செயலாளர் பதவிகளில் குறைந்தது 2223 விண்ணப்பதாரர்கள் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் எஸ்.சி. / எஸ்.டி. மற்றும் ஓ.பி.சி. பிரிவுகளில் இருந்து தேர்வு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

இது அரசியல் சாசனத்தை மீறும் செயல் இல்லையா?

பிரதமர் அவர்களே, நீங்கள் இந்த சட்டவிரோதமான, இடஒதுக்கீட்டுக்கு எதிரான ஆட்சேர்ப்பு செயல்முறையை தொடரப் போகிறீர்களா அல்லது அரசியல் சட்ட இடஒதுக்கீட்டு முறையை செயல்படுத்தி புதிய நியமனத்திற்கு அழைப்பு விடுக்கப் போகிறீர்களா?” என தெரிவித்துள்ளார்.

## கலைஞர் நூற்றாண்டையொட்டி - ‘என் உயிரிலும் மேலான...!’ எனும் தலைப்பில்

# காரைக்குடியில் மாணவ - மாணவிகளுக்கான பேச்சுப்போட்டி!

## அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் தலைமை! நாகனி செந்தில்குமார் அறிவிப்பு!

*சிவகங்கை, ஆகஸ்ட் 21-*

சிவகங்கை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆலோசனையின் பேரில் மாநில இளைஞரணி சார்பில் மாநில இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உத்தரவின் பேரில் மாணவ மாணவிகளுக்கு பேச்சாற்றல் திறனை உருவாக்கும் வகையில் என் உயிரினும் மேலான என்ற தலைவர் கலைஞர் குறித்த பேச்சுப் போட்டி மாவட்டம் தோறும் நடைபெற்று வருகின்றது.

இதன்படி சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் மாவட்ட இளைஞரணி சார்பில் வருகிற 25 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி அளவில் காரைக்குடி அபூர்வா திருமண மஹாலில் என் உயிரிலும் மேலான என்ற கலைஞர் குறித்த கல்லூரி மாணவ மாணவிகளுக்கான பேச்சுப் போட்டி நடைபெறுகிறது.

சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ராஜா, முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோர் முன்னிலையில் இந்த பேச்சுப் போட்டிகள் நடைபெறுகிறது.

நான் (மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார்) வரவேற்றுப் பேசுகிறேன்.

இந்த பேச்சுப் போட்டியில் மாவட்டம் முழு வதிலும் இருந்து கல்லூரி மாணவ மாணவிகள் பங்கேற்று பேசுகிறார்கள். இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார் தலைமையில் இளைஞரணி நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.

இந்த போட்டிகளில் ஏற்கனவே விண்ணப்பித்த மாணவ - மாணவிகளுக்கு தனித்தனியே போட்டி குறித்த அழைப்பிதழ் அனுப்பப்பட்டுள்ளது. அன்றைய தினம் பேச்சுப் போட்டியில் பங்கேற்க விரும்பும் மாணவ - மாணவிகள் காலை 9 மணிக்குள் அபூர்வ திருமண மகாலிற்கு வருகை தந்திடுமாறு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.



சிவகங்கை மாவட்டக் கழகச் துணைச் செயலாளர் திருமதி ஜோன்ஸ் ரூசோ தனது மகன் நடிகர் நிஷாந்த்ரூசோ, சினேகா கேத்தரின் ஆகியோரின் திருமண அழைப்பிதழை கழக இளைஞரணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார். உடன் மருமகன் ராஜா ஸ்டீபன், மகள் ஜெம்மா நிப்பிளா, பேரன் ரூசோ ஆகியோர் உள்ளார்கள்.



விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களின் 253 வது நினைவு தினத்தை முன்னிட்டு தென்காசி மாவட்டம் சிவகிரி வட்டம் பச்சேரி கிராமத்தில் உள்ள விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களின் நினைவிடத்தில் மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தினார்.உடன் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ.,ராணி ஸ்ரீகுமார், எம்.பி.சதன், திருமலைகுமார் எம்.எல்.ஏ., ஒன்றியக் குழு தலைவர்கள் பொன். முத்துராமலிங்கம், (வாசுதேவநல்லூர்)லாலா சங்கரபாண்டியன் (சங்கரன்கோவில்) மாவட்ட பொருளாளர் சரவணன், ஒன்றிய செயலாளர்கள் பூசைப் பாண்டியன்,பெரியதுரை, நகர செயலாளர் பிரகாஷ்,பேரூர் செயலாளர்கள் ரூபி பாலசுப்பிரமணியன், கே.டி.சி குருசாமி, டாக்டர் செண்பக விநாயகம் உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.